# பன்னிரண்டாம் வகுப்பு - பாடம் : தமிழ்

## இயல்: 3. வாழ்வியல் – திருக்குறள் நாள் : 14.10.2020

## பலவுள் தெரிக

1. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க.



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

ஆ. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வனுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

2. திருக்குறளில் உள்ள இயல்களின் என்னிக்கை

அ) 9 ஆ) 8 இ) 7 ஈ) 6

3. “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” என்றவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) நாமக்கல் கவிஞர் ஈ) பரிதிமாற்கலைஞர்

4. கடலின் பெரியது

அ) உற்ற காலத்தில் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி இ) தினையளவு செய்த உதவி

5. அன்பும் அறமும் - இலக்கணக்குறிப்புத் தருக.

அ) எண்ணும்மை ஆ) பண்புத்தொகை இ) தொழிற்பெயர் ஈ) இடவாகுபெயர்

6. சரியான இணையைத் தேர்வு செய்க.

அ) வெகுளி - தெப்பம் ஆ) புணை - செல்வம்

இ) ஏமம் - பாதுகாப்பு ஈ) திரு - கோபம்

7. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?

அ) செய்யாமல் செய்த உதவி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி

இ) தினைத்துணை நன்றி ஈ) செய்ந்நன்றி

8. ‘தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்’, ’உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’ என்னும் விதிகளின்படி புணரும் சொல்

அ) நன்கலம் ஆ) மறத்தல் இ) சினமென்னும் ஈ) செல்லிடத்து

9. பொருத்துக.

அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - 1) சேர்ந்தாரைக் கொல்லி

ஆ) பயன்தூக்கார் செய்த உதவி - 2) ஞாலத்தின் மாணப் பெரிது

இ) சினம் - 3) தெய்வத்துள் வைக்கப் படும்

ஈ) காலத்தினாற் செய்த நன்றி - 4) நன்மை கடலின் பெரிது

அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 1, 2, 3, 4 ஈ) 2, 3, 4, 1

10. தொடர்புடைய இரு பொருள்களில் ஒன்றை மட்டும் உருவகம் செய்து மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுவது

அ) நிரல்நிரை அணி ஆ) உவமையணி இ) ஏகதேச உருவக அணி ஈ) உருவக அணி